## அவசர கூட்டம்

யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்திய சாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கான அவசர கூட்டமொன்று இன்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெறவுள்ளதென்று அதன் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். நடைமுறைச் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்படவேண்டியுள்ளதால் சகல வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளையும் ஊரடங்கு தளர்த்தப்பட்டு ஒரு மணித்தியாலத்துக்குள் வருகை தருமாறு அவர் கேட்டுள்ளார்.

Registered as a Newspaper at the G.P.O

விலை ரூபா-10.00

# தினக்குரல்

தினக்குரல்

THINAKKURAL

An Independent Daily Voice in Tamil

## பெற்றோல் 7/= அதிகரிக்கும்?

இந்தியன் ஒயில் கம்பனி (ஐ.ஓ.சி) செப்டெம்பர் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முதல் பெற்றோலின் விலையை 7 ரூபாவினால் அதிகரிக்க உத்தேசித்துள்ளது.

இதேவேளை, செப்டெம்பர் 3 ஆம் திகதி நள்ளிரவு முதல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எல்.ஓ.சி. நிறுவனம் பெற்றோலின் விலையை 3 ரூபாவினால் அதிகரிக்கவுள்ளதாக எரிபொருள் வளத்துறை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஓசை : 05
குரல் : 153

விய வருடம் ஆவணி மாதம் 14 ஆம் நாள் புதன்கிழமை ஷஃபான் 05 ஹிஜ்ரி வருடம் 1427 Daily Yarl Thinakkural Wednesday 30th August 2006. Phone: 2222127 Fax:2223735 பக்கங்கள் - 04

இணையதள முகவரி
www.thinakural.com

# சூரியன் எவ்.எம் செய்தி முகாமையாளர் நடராஜா குருபரன் கடத்தப்பட்டார்!



'சூரியன் எவ்.எம்.' வானொலியின் செய்தி முகாமையாளரும் செய்தி ஆசிரியருமான நடராஜா குருபரன் (39 வயது) நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கல்கிசை பின்தாளிய வீதியில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

வழமைபோல் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் வீட்டிலிருந்து கடமைக்காக தனது வானில் அலுவலகம் நோக்கிப் புறப்பட்ட ஓரிரு நிமிடத்தில் வீட்டுக்கு அருகில், காலி வீதி முகப்பில் வைத்து கடத்தப்பட்டுள்ளார்.

கல்கிசை காலி வீதியில் தரைப் பக்கமாகவுள்ள (லான்ட் சைற்) பின்தாளிய வீதியிலுள்ள வீட்டிலிருந்து வானில் புறப்பட்டு சுமார் 40 மீற்றர் தூரத்தில் காலி வீதிக்கு திரும்புவதற்காக வான் வந்தபோதே, வானை வழிமறித்தவர்கள் இவரை வானிலிருந்து இறக்கி கடத்திச் சென்றுள்ளதாகக் கருதப்படுகிறது. கோட்டை உலக வர்த்தக மையக் கட்டிடத்திலிருக்கும் அலுவலகத்திற்கு அதிகாலை 5 மணிக்குள் கடமைக்கு வந்து சேரும் இவர், 5.30 மணியாகியும் வராததால், அலுவலகத்திலிருந்து குருபரனின் வீட்டிற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது, அவர் 4.30 மணிக்கு அலுவலகம் சென்றுவிட்டதாக மனைவி கூறியுள்ளார்.


இதையடுத்து, குருபரன் வராத நிலையில் வேறொருவர் செய்தியைத் தயாரித்து, நேற்று காலை நேரச் செய்தி ஒலிபரப்பப்பட்டது.

இந்த நிலையில் அதிகாலை 5.45 மணியளவில், பாடசாலை வானில் பள்ளிக்கூடம் செல்லும் மகளை அனுப்புவதற்காக வீட்டு வாசலுக்கு வந்த குருபரனின் மனைவி, வீதி மூலையில் வானொன்று ஒழுங்கையை மறைத்துக் கொண்டிருப்பதை அவதானித்த போதும் அதிகாலையில் மங்கிய ஒளி காரணமாக வானை சரியாக அடையாளம் காணவில்லை.

எனினும், சந்தேகம் எழவே, தனது மகனை அனுப்பி அந்த வான் தங்களுடையதாவென்று பார்த்து வருமாறு கூறியுள்ளார்.

வான் நின்ற இடத்திற்குச் சென்ற மகன், அது தங்களுடைய வானென்பதை உறுதிப்படுத்தி வந்து தாயிடம் கூறியதுடன் வானின் சாரதி அமரும் பக்க (2ஆம் பக்கம் பார்க்க)

சோகத்துடன் அவரது குடும்பத்தினர்



## சர்வதேச ஊடகவியலாளர் சங்கம் கடும் கண்டனம்!

சூரியன் எவ்.எம். வானொலியின் செய்தி முகாமையாளர் நடராஜா குருபரன் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இனம் தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது தொடர்பாக சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் அதிர்ச்சியடைந்துள்ளதுடன் தனது கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

அதேவேளை, மோதல்கள் தொடர்பான செய்திகளை கையாளும் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் இச் சம்பவம் இடம்பெற்றிருப்பது (2ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியக் கோரிக்கை அரசினால் நிராகரிப்பு!

அதேவேளை, மோதல்கள் தொடர்பான செய்திகளை கையாளும் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் இச் சம்பவம் இடம்பெற்றிருப்பது (2ஆம் பக்கம் பார்க்க)

## குருபரனை விடுவிக்கக்கோரி கோட்டையில் ஆர்ப்பாட்டம்!



''சூரியன் எவ்.எம்.'' செய்தி முகாமையாளர் நடராஜா குருபரன் இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரியும் தமிழ், சிங்கள ஊடகவியலாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர். (2ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி அதிர்ச்சி!



'சூரியன்' வானொலியின் செய்தி முகாமையாளர் நடராஜா குருபரன் கடத்தப்பட்டமை குறித்து அதிர்ச்சி வெளியிட்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, உடனடியாக அவரை தேடி கண்டுபிடிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அவசர பணிப்புரை விடுத்துள்ளதுடன் தனது ஆட்சிக் காலத்தில் ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதை ஒருபோதும் அனும

(2ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த லண்டன் பயணம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் நேற்று செவ்வாய்க்கிழமை வெளிநாட்டு விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி பிற்பகல் 1.15 மணியளவில் ஸ்ரீலங்கன் விமானச் சேவையின் யூ.எல்.503 விமானம் மூலம் இலண்டனுக்கு பயணமாகியுள்ளார். (2ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய அரசமைக்கும் முயற்சிக்கு வர்த்தக சம்மேளனம் வரவேற்பு!

தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டு வரும் முயற்சிகளை இலங்கை வர்த்தக சம்மேளனம் வரவேற்றுள்ளது.

இலங்கை வர்த்தக சம்மேளனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; (2ஆம் பக்கம் பார்க்க)

## சம்பூரை மீளக் கைப்பற்றும்வரை தாக்குதல்கள் தொடருமாம்

**மோதல்களை உடனடியாக நிறுத்துமாறு இந்தியாவும் சர்வதேச சமூகமும் விடுத்த வேண்டுகோளை இலங்கை அரசாங்கம் நிராகரித்துவிட்டது.**

**திருகோணமலைத் துறைமுகத்துக்கு அச்சுறுத்தலாக விடுதலைப் புலிகள் நிலைகொண்டிருக்கும் சம்பூர் பகுதியை மீளக் கைப்பற்றும்வரை தாக்குதல்களை நிறுத்தப் போவதில்லை என்று அரசாங்கம் அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.**

மோதல்கள் தொடருவதனால் ஏற்படக்கூடிய நீண்டகால பாதக விளைவுகள் குறித்த விசனத்தை அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கையிடம் நேரடியாகவும் வேறு வழிகளிலும் தெரியப்படுத்தியிருக்கின்றன. தங்களது செய்தி இலங்கை அரசாங்கத்துக்கு மாத்திரமல்ல, விடுதலைப் புலிகளை நோக்கியும் விடுக்கப்பட்டிருப்பதாக இந்தியாவும் இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பிலான கூட்டுத் தலைமை நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் மற்றும் நோர்வே ஆகியவையும் தெரிவிக்கின்றன.

ஆனால், இந்தக் கோரிக்கைகளை அலட்சியம் செய்துகொண்டு இலங்கை அரசாங்கம் சம்பூரையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் விடுதலைப் புலிகளிடமிருந்து மீளக் கைப்பற்றுவதற்கான (2ஆம் பக்கம் பார்க்க)

## சுட்டுக் கொலைகள்

### யாழ்.நகரில்...

யாழ்நகரில் கன்னாதிட்டி காளிகோவில் வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கராஜ் உரிமையாளரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 10.45 மணியளவில் இவர் காளிகோவில் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது தனியார் கல்வி நிலையமொன்றுக்கு அருகில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

(2ஆம் பக்கம் பார்க்க)

### அச்சுவேலியில்...

அச்சுவேலி பகுதியில் தம்பாலை - கலட்டி வீதியில் திங்கட்கிழமை இரவு சைக்கிள் திருத்தும் நிலைய உரிமையாளரொருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இரவு 8 மணியளவில் இவர் வீட்டு 'கேற்'றை பூட்ட வந்த போதே, வீட்டுக்கு வெளியே வந்தவர்கள் இவரை வீதிக்கு அழைத்து சுட்டுக்கொன்று விட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

தம்பாலை கலட்டி வீதியைச் சேர்ந்த இரா

(2ஆம் பக்கம் பார்க்க)

### முத்திரைச் சந்தியில்...

நல்லூர் முத்திரைச் சந்தி பகுதியில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் லாண்ட மாஸ்டர் சாரதியொருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். கச்சேரி - நல்லூர் வீதியில் முத்திரைச் சந்தி அருகிலேயே இவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சலூனுக்குச் சென்று தலை முடியை வெட்டிவிட்டு பிற்பகல் ஒரு மணியளவில் இவர் வெளியே வந்தபோதே மோட்டார் சைக்கிளொன்றில் வந்தவர்கள் இவரை சுட்

(2ஆம் பக்கம் பார்க்க)

## பச்சனூர், தோப்பூர் பகுதிகளில் இரண்டாவது நாளாக மோதல்!

### இரு தரப்பிலும் பாரிய இழப்புக்கள்

மூதூர் கிழக்கை நோக்கி நேற்று செவ்வாய்க்கிழமை இரண்டாவது நாளாக படையினர் பாரிய நகர்வை மேற்கொள்ள முயன்றதைத் தொடர்ந்து நேற்றுக் காலை முதல் உக்கிர சமர் நடைபெற்று வருகிறது.

மூதூர் கிழக்கில் சம்பூரை மையமாக வைத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை படையினர் மும்முனைகளூடாக பாரிய நகர்வொன்றை ஆரம்பித்தனர்.

எனினும், படையினரை வழிமறித்த புலிகள் உக்கிர தாக்குதலை நடத்தவே அன்று முழுநாளும் கட்டைபறிச்சான், பச்சனூர், தோப்பூர் பகுதிகளில் படைமுகாம்களின் முன்னரங்க காவல் நிலைகளுக்கு வெளியே கடும் சமர் நடைபெற்றது.

திங்கட்கிழமை இரவு பாரிய (2ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டுக்கான தரைவழிப் பாதையை திறந்துவிட விடுதலைப் புலிகள் இணக்கம்!

### கூட்டமைப்பினரிடம் தமிழ்ச்செல்வன் உறுதியளிப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் அவசர மனிதாபிமான பிரச்சினையை கருத்திற்கொண்டு உடனடியாக 'ஏ 9' வீதியை திறந்துவிட விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உறுதியளித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன், கி.சிவநேசன் ஆகியோர் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்து கலந்துரையாடிய போதே குடாநாட்டுக்கான தரைவழிப்பாதையை திறக்க உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கஜேந்திரன் மற்றும் சிவநேசன் எம்.பி.க்கள் விடுத்த அறிக்கையில்,

குடாநாட்டு மக்கள் போக்குவரத்து தடையால் பாரிய மனிதாபிமானப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். பல்வேறுபட்ட தேவைகளுக்காக குடாநாட்டுக்கு சென்ற அரச, அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள், பொது மக்கள் தமது சொந்த இடம் திரும்ப முடியாது (2ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாவிலிருந்து பொதுமக்களை வெளியேற்றும் முயற்சி சீர்குலைந்தது!

### புலிகள் குற்றச்சாட்டு

மூதூர் கிழக்கில் சம்பூரைக் கைப்பற்றும் நோக்கிலான இராணுவத்தின் வலிந்த தாக்குதல் நடவடிக்கையால் யாழ். குடாவிலிருந்து பொது மக்களை வெளியேற்றி திருகோணமலைக்கு கொண்டு வரும் முயற்சிகள் சீர்குலைந்துள்ளதாக விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் சி.புலித்தேவன் குற்றம் சாட்டியுள்ளார். (2ஆம் பக்கம் பார்க்க)

# தலைவர் பிரபாவின் நிழலைக் கூட இராணுவத்தால் தொடமுடியாது!

## வைரவரிக் கவிஞர் வைரமுத்து



விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நிழலைக் கூட இராணுவத்தால் தொட முடியாது என்று கவிஞர் வைரமுத்து தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு செஞ்சோலை படுகொலையைக் கண்டித்து சென்னையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை தமிழர் பேரவையின் சார்பில் பேராசிரியர் சு.ப. வீரபாண்டியன் தலைமையில் உண்ணாநிலைப் போராட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு மின்துறை அமைச்சர் ஆற்காடு நா. வீராசாமி இந்த உண்ணாநிலைப் போராட்டத்தை தொடக்கி வைத்துப் பேசினார்.

அவர் தனது உரையில், ''செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக இந்திய அரசாங்கம் அனுப்பி வைத்த உணவுப் பொருட்களை அரசாங்கம் தடுத்துள்ளது என்று கேள்விப்பட்டோம். தமிழக முதல்வர் கலைஞரை அகதிகளாக வந்த ஈழத் தமிழ்ப் பெண் ஒருவர் சந்தித்து நிலைமைகளை விளக்கினார். தமிழர்கள் இன்னமும் கொல்லப்பட்டு வருகிறார்களே என்று கலைஞர் கண்ணீர் சிந்தினார்.

முதல்வர் கலைஞர் தனது எல்லைக்குட்பட்ட அனைத்து வகைகளிலும் ஈழத் தமிழர்களைப் பாதுகாப்பார்'' என்றார்.

நடிகர் சத்யராஜ் பேசுகையில், ''செஞ்சோலையில் 61 சிறுமிகளைக் கொன்றுவிட்டு அதற்கு சப்பைக்கட்டு கட்டுவது மிகவும் கோழைத்தனமானது. ஈழத் தமிழர்கள் விடியலையும் சுதந்திரக் காற்றையும் விரைவில் சுவாசிப்பார்கள்'' என்றார்.

கவிஞர் வைரமுத்து பேசியதாவது:

''கும்பகோணம் தீ விபத்தில் மாணவிகள் எரிந்தபோது தமிழ்நாடே எழுந்து அழுதது. செஞ்சோலையில் மாணவிகள் கொல்லப்பட்டபோது அப்படி நிகழ்ந்ததா என்பதை நம் நெஞ்சைத் தொட்டுப் பார்க்க வேண்டும். விபத்துக்கு அழுகின்ற தமிழன் கொலைக்கு அழமாட்டானா?

விடுதலைப் புலிகளை வெல்லவே முடியாது என்று இலங்கை இராணுவம் ஒப்புக் கொண்டிருக்கிறது. இந்திய அரசாங்கமே! நாங்கள் இந்தியாவின் இறைமைக்கு எதிரானவர்கள் அல்ல. தமிழ்நாடு சட்டமன்றத்திலே இறைமைக்கு உட்பட்டு கண்டனத் தீர்மானத்தை கலைஞர் நிறைவேற்றியுள்ளார் என்பது அவரது வலியை வெளிப்படுத்துகிறது.

இந்திய அரசே! சிங்களவருக்கு ஆயுதம் கொடுப்பது தமிழருக்கு விரோதம். இந்தியா ஆயுதம் கொடுக்காத போது பாகிஸ்தானிடம் சிங்களவர் ஆயுதம் வாங்குவது இந்திய இறைமைக்கு விரோதம் என்றும் அவர் கூறினார்.

## குடாநாட்டுக்கான

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவதியுறுகின்றனர். அதேபோல், பல்வேறு தேவைகளின் நிமித்தம் வன்னிக்குச் சென்ற பலரும் குடாநாட்டுக்கு திரும்ப முடியாதுள்ளனர்.

குடாநாட்டிற்கும் வன்னிக்குமான எரிபொருள் விநியோகம், விவசாய உள்ளீடுகளின் விநியோகங்கள் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளன. தொலைத்தொடர்புகள், போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டுள்ளன. வைத்தியசாலைகளை சீராக இயங்க வைக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது.

இதன் காரணமாக குடாநாட்டிலுள்ள ஐந்தரை இலட்சம் மக்களும் வன்னியிலுள்ள மூன்று இலட்சம் மக்களும் பாரிய மனிதாபிமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளதுடன் பட்டினி நிலைமையையும் எதிர்கொள்கின்றனர். உணவுப் பொருட்களை தென்பகுதியிலிருந்து வன்னிக்கும் குடாநாட்டிற்கும் எடுத்துவர முடியாத நிலையில் நிவாரணம் பெறும் குடும்பங்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இது தொடர்பாக நாம் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சந்தித்து நிலைமைகளை எடுத்து விளக்கினோம்.

யாழ். குடாநாட்டுக்கான தரைவழிப்பாதையை திறக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தோம்.

எமது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட தமிழ்ச்செல்வன் யாழ். குடாநாட்டுக்கான தரைவழிப்பாதையை திறப்பதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்துள்ளார். எனவே, தமிழ் மக்களின் மனிதாபிமான பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு ஏ9 வீதியை திறந்து மக்களின் மனிதாபிமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசு முன்வர வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு இரு பிரதான கட்சிகளும் இரு தரப்பு அணுகுமுறையை கையாள வேண்டுமென்பதை வர்த்தக சம்மேளனம் ஆதரித்து வந்துள்ளது. இதன் காரணமாக தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்காக ஜனாதிபதி முக்கிய எதிர்க் கட்சியை அழைத்துள்ளமையில் பெருமளவு திருப்தியடைந்துள்ளோம்.

ஜனாதிபதியின் இந்த துணிச்சலான முடிவை பாராட்டும் அதேவேளை, எமது நாடு எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கும் தேசிய அரசாங்கம் தீர்வாக அமையாது.

தேசிய அரசாங்கத்தின் மூலம் அர்த்தபூர்வமான தாக்கம் ஏற்பட வேண்டும்.

குறிப்பாக, சமாதான முயற்சிகள் குறித்து நிபந்தனையற்ற கருத்தொருமைப்பாட்டிற்கு முக்கியத்துவமளிக்க வேண்டும். இது குறித்தே கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டின் நலனை கருத்தில் கொண்டு கடந்த கால நம்பிக்கையின்மையும் பகைமையும் கைவிடப்பட வேண்டும். மேலும், தொடர்ச்சியான சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக பொதுவான தந்திரோபாயமொன்று வகுக்கப்பட வேண்டும்.

## முத்திரை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுக் கொன்றுள்ளனர்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த அரியரத்தினம் சத்தியசீலன் (26 வயது) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். மரண விசாரணையின் பின் இவரது சடலம் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டது.

## அச்சுவேலியில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரத்தினம் கணேசலிங்கம் (40 வயது) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

ரி.56 ரக துப்பாக்கியாலேயே இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

## யாழ்.நகரில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிளொன்றில் வந்தவர்களே இவரை சுட்டுக் கொன்றுள்ளனர்.

வெலிங்டன் சந்திக்கு அருகில் இவரது கராஜ் உள்ளது. சம்பவத்தையடுத்து, அங்கு வந்த யாழ்.மாவட்ட நீதிபதி மரண விசாரணையை நடத்தியதுடன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்.

## மகிந்த....

# ஊடகவியலாளரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஈ.பி.டி.பி. கோரிக்கை

சூரியன் எவ்.எம். செய்தியாசிரியர் நடராஜா குருபரன் செவ்வாய்க்கிழமை காலை கடத்தப்பட்டுள்ளார் என்ற செய்தி பெரும் அதிர்ச்சியைத் தந்ததாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

குருபரன் கொண்டிருந்த கருத்தை கருத்தால் எதிர்கொள்ள முடியாதவர்களே அவரைக் கடத்தியுள்ளனர். இந்தக் காட்டுமிராண்டித் தனமான செயலை ஈ.பி.டி.பி. வன்மையாகக் கண்டிக்கிறது.

கடத்தியவர்கள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படவும், கூடவே நடராஜா குருபரன் உயிராபத்து இல்லாமல் மீட்கப்படவும், அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று, கருத்துகளை மதிக்கும் ஜனநாயகக் கட்சி என்ற வகையில் அரசுக்கு ஈ.பி.டி.பி. எடுத்துக் கூறியுள்ளது.

ஊடகவியலாளர்களைக் கொலை செய்வது, அச்சுறுத்துவது, கடத்துவது போன்ற செயற்பாடுகளினால் அவர்கள் கொண்டிருக்கும் கருத்துகளை சாகடித்து விட முடியாது என்பதை ஒவ்வொரு தரப்பும் புரிந்து கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்துக் கொள்வதோடு, நடராஜா குருபரனை மீட்கும் பணியில் ஈ.பி.டி.பி. தன்னாலான அனைத்து முயற்சிகளையும் எடுத்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றது.

## தனுஷ்கோடிக்கு நேற்றும் 55 அகதிகள் சென்றனர்

இலங்கை திருகோணமலை, மன்னார், வவுனியா மாவட்டங்களிலிருந்து 14 குடும்பங்களைச் சேர்ந்த 55 அகதிகள் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இராமேஸ்வரம் சென்றனர்.

தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையில் வந்திறங்கிய இவர்களை தனுஷ்கோடி உதவி இன்ஸ்பெக்டர் ஆத்மநாபன் விசாரணை செய்து மண்டபம் அகதிகள் முகாமுக்கு அனுப்பி வைத்தார். இதுவரை 10 ஆயிரத்து 845 அகதிகள் சென்றுள்ளனர்.

## யாழ்.குடா..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து ராய்ட்டர் செய்தி நிறுவனத்திடம் புலித்தேவன் கூறுகையில்;

இராணுவத்தினர் பாரிய வலிந்த தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். எமது முன்னரங்க நிலைகளை உடைத்து முன்னேற முயற்சித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு தமிழ் மக்களை பாதுகாப்பாக அழைத்து வருவது குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தோம். ஆனால் அதை சீர்குலைக்கும் வகையில் இந்த நடவடிக்கையை இராணுவம் மேற்கொண்டுள்ளது. தற்போது திருகோணமலை துறைமுகம் மீது நாங்கள் ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களை நடத்துவதால் அது பாதுகாப்பானதாக இல்லை. இராணுவத்தின் வலிந்த தாக்குதல் நீடிக்கும் வரை மக்களை அழைத்து வர இயலாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

## சர்வதேச...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவாக தெரிவதாகவும் இலங்கையில் தமிழ் ஊடகவியலாளர்கள் பாதுகாப்பும் கேள்விக்குறிக்கு தள்ளப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. குருபரன் ஆயுதக்குழுக்களின் அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டிருந்த நிலையில் தமது கருத்துகளை வெளியிட்டு வந்தவர். இதனால் அவருக்கு எதிரான மறைமுக நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளன.

உண்மைகளை வெளியிடுவதை தொழிலாக கொண்டுள்ள ஊடகவியலாளர்களின் எதிர்காலம் இலங்கையில் கேள்விக்குறியாகி இருப்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பொறுப்புள்ளவர்கள் கடத்தப்பட்டுள்ள ஊடகவியலாளரை பாதுகாப்புடன் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் கிறிஸ்ரோபன் வொன் கோரிக்கை விடுத்துள்ளார்.

## குருபரனை..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை நடைபெற்ற இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டபேரணியில், 200க்கும் மேற்பட்ட தமிழ், சிங்கள ஊடகவியலாளர்கள் கலந்து

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஊடகவியலாளர்கள் சிறிது நேரம் வீதியின் குறுக்கே அமர்ந்து கொண்டதால் அப்பகுதியூடான போக்குவரத்தில் நெரிசல் ஏற்பட்டது.

கொள்கின்றனர். உணவுப் பொருட்களை தென்பகுதியிலிருந்து வன்னிக்கும் குடா நாட்டிற்கும் எடுத்துவர முடியாத நிலையில்

மனிதாபிமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசு முன்வர வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பச்சனூர், தோப்பூர்... (1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மோதல்கள் எதுவும் நடைபெறாத நிலையில், நேற்றுக் காலை மீண்டும் கடும் சமர் வெடித்தது. நேற்றுக் காலை படையினர் பச்சனூர் மற்றும் தோப்பூர் படை முகாம்களிலிருந்து மூதூர் கிழக்குப் பக்கமாக டாங்கிகள் மற்றும் கவச வாகனங்கள் சகிதம் முன்னேற முயன்ற போது உக்கிர மோதல் வெடித்தது. இரு முனைகளூடாக முன்னேறும் முயற்சியில் ஈடுபட்ட படையினருடன் புலிகள் உக்கிரமாக மோதி வருகின்றனர்.

தரைப் படையினருக்கு ஆதரவாக கிபீர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தி வருவதுடன் படை முகாம்களிலிருந்து ஆட்லறி ஷெல்களும் பல்குழல் ரொக்கட்டுகளும் மழை போல் பொழிந்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதல்களில் தங்கள் தரப்பில் 16 படையினர் கொல்லப்பட்டும் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகத் தெரிவித்த படையினர், புலிகள் தரப்பில் 60க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டும் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துமுள்ளதாக கூறினர்.

எனினும், தங்கள் தரப்பில் 12 போராளிகள் உயிரிழந்தும் 15 பேர் காயமடைந்துமுள்ளதாக நேற்று பிற்பகல் தகவல் வெளியிட்ட புலிகள், படையினர் தரப்பில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டும் 110 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

## சூரியன் எவ்.எம்... (1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கதவு திறந்திருப்பதாகவும் வானின் எஞ்சின் இயங்கிக் கொண்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.

இதற்கிடையில் அதிகாலை 5.30 மணியளவில் பொலிஸ் அவசர சேவைப் பிரிவுக்கு (119) யாரோ தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, காலி வீதியோரத்தில் ஒழுங்கையொன்றின் முகப்பில் நீண்ட நேரமாக வானொன்று நிற்பதாகக் கூறியபோதும் அவர்கள் அவ்விடத்திற்கு நீண்ட நேரத்திற்குப் பின்பே வந்துள்ளனர்.

இவ்வேளையில், அயலவர்களின் உதவியுடன் கல்கிசைப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற குருபரனின் மனைவி, தனது கணவன் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளார்.

காலை 7.15 மணியளவில் வந்த பொலிஸார், வானை முழுமையாகச் சோதனையிட்டுள்ளனர். வானின் சாரதி ஆசனத்துக்கு கீழே, குருபரனின் அலுவலக கையடக்க தொலைபேசி இருந்துள்ளது.

எனினும், அவரது சொந்த கையடக்க தொலைபேசிக்கு தொடர்பு கொண்டபோது அது செயலிழந்திருந்தது. காலை 5 மணி முதல் அந்தத் தொலைபேசி இயங்கவில்லையெனத் தெரிவிக்கப்படுவதால், அவரைக் கடத்தியவர்கள் உடனடியாகவே அவரது கையடக்கத் தொலைபேசியை பறித்து அதனைச் செயலிழக்கச் செய்திருக்கலாமென பொலிஸார் கருதுகின்றனர்.

அத்துடன், பின்தாளிய வீதி முகப்பில் காலி வீதியில் நின்றவர்கள் வானை சாதாரணமாக அல்லது துப்பாக்கி முனையில் வழிமறித்து குருபரனை வானிலிருந்து பலவந்தமாக இறக்கி, தாங்கள் வந்த வானில் கடத்திச் சென்றிருக்கலாமெனவும் பொலிஸார் கருதுகின்றனர்.

திடீர் நோய்வாய்ப்பட்டு இவர் ஆஸ்பத்திரிகள் எங்காவது அனுமதிக்கப்பட்டிருக்கலாமென்ற சந்தேகத்திலும் சக ஊழியர்கள் ஆஸ்பத்திரிகள் பலவற்றுடனும் தொடர்பு கொண்டிருந்தனர்.

ஆரம்ப காலத்தில் ‘சரிநிகர்’ வார இதழில் கடமையாற்றிய குருபரன், 1990 களின் பிற்பகுதியில் ஆசிய ஒலிரப்புக் கூட்டுத்தாபனத்தின் ‘சூரியன் எவ்.எம்.’ வானொலியில் இணைந்து செய்தி ஆசிரியராகி பின்னர் செய்தி முகாமையாளராகவுமிருந்தார்.

பிரதி சனிக்கிழமை தோறும் காலை ஒலிபரப்பாகும் ‘விழுதுகள்’ நிகழ்ச்சி மூலம் இவர் புகழ்பெற்றிருந்தார். அத்துடன், தினமும் செய்தி அறிக்கையின் பின் ஒலிபரப்பாகும் ‘சுட்டெரிக்கும் நிமிடம்’ நிகழ்ச்சியும் இவரை பிரபலமாக்கியிருந்தது.

கடந்த சனிக்கிழமை ஒலிரப்பான விழுதுகள் நிகழ்ச்சியில், மனித உரிமை மீறல்கள் மற்றும் கொழும்பில் தமிழர்கள் கடத்தப்படுவது தொடர்பாக காரசாரமான கருத்துகள் முன்வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பு மாநகரின் பாதுகாப்பு பெருமளவில் பலப்படுத்தப்பட்டிருந்த நிலையில், தமிழ் ஊடகவியலாளரொருவர் கடத்தப்பட்டது ஊடகவியலாளர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இவரது கடத்தல் குறித்து கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ள அரசியல் தலைவர்கள் பலரும் ஊடக அமைப்புகள் பலவும் இவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர் யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இரு பிள்ளைகளின் தந்தையுமாவார்.

அனுப்பி வைத்தார்.

## மகிந்த....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் மங்கள சமரவீரவும் காலை 10.30 மணியளவில் எமிரேட்ஸ் விமான சேவையின் பீ.கே.3551 என்ற இலக்கமுடைய எயார் பஸ் விமானத்தில் டுபாய் ஊடாக இலண்டன் சென்றுள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிரதமர் இரட்ணசிறி விக்கிரமநாயக்க கொரியாவிற்கு சென்றுள்ளதாகவும் விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியும் அமைச்சர் மங்கள சமரவீரம் இலண்டனில் முன்னால் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவை சந்திக்கவிருப்பதாகவும் பிரதமரும் இந்த சந்திப்பில் இணைந்து கொள்ள இருப்பதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஜனாதிபதி....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திக்கப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். ‘சூரியன்’ செய்தியாசிரியர் கடத்தப்பட்டமை பற்றி மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகரும், ஊடக ஆலாட்சி அதிகாரியுமான ஏ.எச்.எம்.அஸ்வர் ஆகியோர் அலரி மாளிகையில் ஜனாதிபதியை நேரடியாக சந்தித்து எடுத்துக் கூறினர்.

இங்கிலாந்துக்கு தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொள்ள தயாராகவிருந்த ஜனாதிபதியிடம் இவ்விடயம் கூறப்பட்டதும், தனது பயணத்தை 30 நிமிடங்கள் தாமதப்படுத்திய ஜனாதிபதி உடனடியாக அவ்விடத்திற்கு வருமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார். அங்கு விரைந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமும் பொலிஸ்மா அதிபரிடமும், கடத்தப்பட்ட சூரியன் செய்தியாளரை விடுவிக்க உடன் தேடுதல் முடுக்கி விடப்பட வேண்டும்.

ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. என்மீதும், எனது அரசாங்கம் மீதும் சேறு பூசவே இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுகின்றன.

இந்நிலையில், கடத்தப்பட்ட ஊடகவியலாளரை விடுவிக்க அனைத்து முயற்சிகளும் உடன் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபரிடம் ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதையடுத்து இராணுவத்தினரும், பொலிஸாரும் கடத்தப்பட்ட ஊடகவியலாளரை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக ஆளுநர் அலவி மௌலானா மற்றும் ஏ.எச்.எம்.அஸ்வர் ஆகியோர் தெரிவித்தனர்.

12.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை நடைபெற்ற இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டபேரணியில், 200க்கும் மேற்பட்ட தமிழ், சிங்கள ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

கொழும்பு, கோட்டை ரயில் நிலையம் முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், முஸ்லிம் மீடியா போரம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், ஊடகவியலாளரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தொழிற் சங்க ஒன்றியம், ஹிரு அமைப்பு என்பவற்றின் முக்கிய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

‘ஊடகவியலாளர் குருபரனை உடனே விடுதலை செய்’, ‘குருபரனின் கடத்தலுக்கு அரசே பதில் சொல்’, ‘ஊடக சுதந்திரம் மீது கை வைக்காதே’, ‘கொல்லாதே, கொல்லாதே, ஊடகவியலாளர்களைக் கொல்லாதே’, ‘அரசே கொலைகாரர்களிடமிருந்து குருபரனை காப்பாற்று’ போன்ற பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் கோஷமெழுப்பினர்.

லாளர்கள் சிறிது நேரம் வீதியின் குறுக்கே அமர்ந்து கொண்டதால் அப்பகுதியூடான போக்குவரத்தில் நெரிசல் ஏற்பட்டது.

தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா, மனித உ[illegible] சுனிலா அபேஜெயசேகா, புதிய இடதுச முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் நடராஜா ஜனகன், மேலக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் நடராஜா ரவிக்குமார், முஸ்லிம் மீடியா போரம் தலைவர் எம்.எம்.அமீன், சுதந்திர ஊடக இயக்கத் தலைவர் சுனந்த தேசப்பிரிய, ‘‘ஹறய’’ ஆசிரியர் ஞானசிறி கொத்திக்கொட, உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் போத்தல ஜயந்த உட்பட பல முக்கிய பிரமுகர்களும் இதில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் அங்கு உரையாற்றிய அனைவரும் நடராஜா குருபரனின் உயிருக்கு எந்தவொரு பங்கமும் ஏற்படாமல் அவரை உடனடியாக விடுதலை செய்வதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர்.

## இந்தியக் கோரிக்கை... (1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாரிய இராணுவ தாக்குதலொன்றைத் தொடங்கியிருக்கிறது.

முடிவின்றித் தொடரும் மோதல்கள் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வர உதவப் போவதில்லை என்பதே சர்வதேசத்தின் மத்தியில் உறுதியான அப்பிராயமாக இருக்கிறது.

‘மோதல்கள் நிறுத்தப்படுவதையே நாம் விரும்புகிறோம். சண்டைக்கு ஒரு உடனடி முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென்பதே எமது விருப்பம். இதுகாலவரையான சண்டைகளில் எந்தத் தரப்புமே பயனடையவில்லை. எத்தரப்புமே உண்மையில் பெரிதாக எதையும் சாதிக்கப் போவதில்லை’ என்று கூட்டுத்தலைமை நாடுகளில் ஒன்றின் பிரதிநிதியொருவர் திருகோணமலை மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை இலங்கை அரசாங்கப் படைகள் தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முன்னதாக குறிப்பிட்டிருந்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் சம்பூரில் இருந்து மேற்கொள்ளப்படக்கூடிய தாக்குதல்களினால் பாதிக்கப்படக் கூடிய நிலையில் திருகோணமலைத் தளம் இருக்கிறது என்று அரசாங்கம் கருதுகிறது. சம்பூரை மீளக் கைப்பற்றுவதற்கான எந்தவொரு தாக்குதலையும் போர் நிறுத்த உடன்படிக்கை மீறலாகக் கருதமுடியாது என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருக்கிறது.

தங்களது கட்டுப்பாட்டிலுள்ள பிராந்தியங்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற ஷெல் தாக்குதல்களும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களும் நிறுத்தப்பட்டால், உகந்த முறையில் பிரதிபலிப்பை வெளிக்காட்ட முடியுமென்று விடுதலைப் புலிகள் நோர்வேக்கு ஏற்கனவே அறிவித்திருந்தனர். இது ஒரு சிறிய வாய்ப்பாக நோக்கப்பட்டது. ஆனால், விடுதலை புலிகள் மீது கடுமையான தாக்குதல்களைத் தொடுப்பதற்குரிய தருணம் இது வென்ற அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டே அரசாங்கம் செயற்படுகின்றது போல் தெரிகின்றது.

தற்போதைக்கு இந்த அணுகுமுறை சில பயன்களைத் தரக்கூடும். ஆனால், நீண்ட கால நோக்கில் எந்தப் பயனும் கிட்டப் போவதில்லை என்று மேற்குலக இராஜதந்திரியொருவர் தெரிவித்தார்.

இராணுவ ரீதியான வெற்றி சாத்தியமென்று நினைக்கும் பேர்வழிகள் இன்னும் கூட இலங்கையில் இருக்கிறார்கள் என்பது ஆச்சரியத்தை தருகிறது. இந்த வகையாகச் சிந்திக்கும் இடங்களாக கொழும்பும் கிளிநொச்சியுமே விளங்குகின்றன என்றும் அந்த இராஜதந்திரி தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் அதன் உடனடி இராணுவ நோக்கங்கள் குறித்து ‘மிகத் தெளிவாக’ இருக்கிறது என்பதே சர்வதேச சமூகத்தின் கருத்தாகும். ஆனால், அந்த உடனடி இராணுவ நோக்கங்களை எட்டுவதன் மூலமாக அடையக்கூடிய கேந்திர முக்கியத்துவ வெற்றிகள் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசை நோக்கித் தள்ளுமா அல்லது அவர்களின் நிலைப்பாட்டை மேலும் கடுமையாக்குமா என்பதே முக்கியமான கேள்வியாகும்.

தினக்குரல்

நொதேர்ன் பப்ளிகேஷன்
(பிரைவேட்) லிமிட்டெட்
இலக்கம்: 336, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
டெலிபோன்: 2222127 பக்ஸ்: 2223735

## தென்னிலங்கை கருத்தொருமிப்பு ஒரு போதுமே சாத்தியப்படாது

இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றைக் காண வேண்டுமென்பதற்காக கடந்த பல வருடங்களாக மாறி மாறி வந்த அரசுகள் அரசியல் இணக்கப்பாடு என்றவொரு காலவித்தையைக் காட்டிக் கொண்டு காலத்தைக் கடத்தியே வந்துள்ளன. இன்றும் அதே நிலை தான் தொடர்கின்றது. தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் கருத்தொருமிப்பை ஏற்படுத்திக் கொண்டு தீர்வுத் திட்டத்தை முன் கொண்டு முன்வைக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கனவு கண்டு கொண்டிருக்கின்றார். இது ஒரு போதும் சாத்தியப் படக் கூடியதொன்றல்ல. ஆட்சிக் கட்டிலிலிருக்கும் போது எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பைக் கோருவதும் ஆட்சி மாறிய பின்னர் முரண்டுபிடிப்பதும் தென்னிலங்கை அரசின் பாரம்பரியமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி சமாதான முயற்சிகளுக்கான கதவுகளை மிகக் கஷ்டப்பட்டுத் திறந்து கொண்டார். பல சுற்றுப் பேச்சுகளும் தொடராக இடம்பெற்றன. அக்கால கட்டத்தில் எதிர்க் கட்சியினர் ரணிலையும், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியையும் இடையறாது விமர்சித்து வந்ததோடு ஆதரவு கொடுப்பதையும் தவிர்த்துக் கொண்டே இருந்தனர். அன்றைய ஜனாதிபதி திருமதி குமாரதுங்க ரணிலின் ஆட்சியை பறித்து மீண்டுமொரு தேர்தலை நடத்தி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார். ஆனால், போர் நிறுத்தம் தொடர்ந்த வண்ணமே இருந்தது. துப்பாக்கிகளுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டே இருந்தது. திருமதி குமாரதுங்கவின் பதவிக் காலம் முடிய ஜனாதிபதித் தேர்தலில் நின்ற அவரது கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ இனவாதக் கூட்டை ஏற்படுத்திக் கொண்டு தென்னிலங்கை பெரும்பான்மை இன மக்களை ஏமாற்றுவதற்காகவே தவறான அணுகு முறையொன்றைப் பிரயோகித்தார். ரணிலின் பிரயத்தனங்கள் பெரும்பான்மை இனத்தைக் காட்டிக் கொடுப்பதாகச் சித்திரித்தவாறு தான் முற்றிலும் மாறுபட்ட நடவடிக்கையின் மூலம் தீர்வு காணப் போவதாக கூறிக் கொண்டு ஆட்சி பீடமேறினார். ஆனால் சமாதான முயற்சிகளுக்கு ரணில் வகுத்த வேலைத் திட்டத்திலிருந்து சிறிதளவும் விலகிச் செல்ல முடியாது என்பதை மகிந்த ராஜபக்ஷவே இன்று ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இன்று அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு சகல தரப்புகளதும் பொது இணக்கப்பாடு தேவையென்ற பழைய கதையை இவரும் சொல்லத் தொடங்கி இருக்கின்றார். தென்னிலங்கை அரசியல் சக்திகளின் பொது இணக்கப்பாடு என்பது ஒரு போதும் சாத்தியப்படக் கூடியதல்ல. இது பேச்சுக்கு அழகாகத் தென்படலாம். ஆனால், [illegible]

## சூரியன் எப்.எம். இன் செய்தி முகாமையாளர்

# நடராஜா குருபரன் கடத்தப்பட்டமைக்கு பல்வேறு அமைப்புகளின் கண்டனங்கள்!

### அமைச்சர் சந்திரசேகரன்

ஊடகவியலாளர் நடராஜா குருபரன் இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டிருப்பது ஊடகத் துறைக்கு மட்டுமல்ல, தமிழ் மக்களின் நலனுக்காக குரல் கொடுக்கும் அனைவருக்கும் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையாகவே கருத வேண்டியுள்ளது என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: "முன்னணியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் சிவகாந்தனின் கடத்தல் சம்பந்தமாகவும் இதுவரையிலும் எவ்விதமான தகவல்களுமே கிடைக்காத நிலையில் தற்போதைய இந்தச் செய்தி மிகவும் அதிர்ச்சி தருவதாக உள்ளது.

யுத்தத்தினால் ஏற்படும் பாதிப்புகளை விடவும் இவ்வாறான கடத்தல் சம்பவங்களே பாரதூரமானதாக உள்ளன.

எனவே, ஜனாதிபதி உடனடியாகவும் நேரடியாகவும் இவ்விடயத்தில் தலையிட்டு இத்தகைய போக்கினை ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்.தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதில் அரசாங்கத்தின் உறுதியான நடவடிக்கைகளை சகலருமே வரவேற்பார்கள்".

### முஸ்லிம் காங்கிரஸ்

"சூரியன் எப்.எம்." வானொலியின் பிரதம செய்தி ஆசிரியர் நடராஜா குருபரன் செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் இருந்து அலுவலகம் வரும் வழியில் இனந் தெரியாதோரினால் கடத்தப்பட்டிருப்பதாக வெளியாகியுள்ள செய்தியறிந்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் அதன் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட கட்சியின் அனைத்து மட்டத் தலைவர்களும் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் அடைந்துள்ளனர்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே பல முறை சுட்டிக்காட்டியிருப்ப[illegible] கவலையுடன் அவதானித்து வருகின்றது என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நடராஜா குருபரன் ஊடகவியலாளராக பணியாற்றத் தொடங்கியதில் இருந்து இன்று வரையிலான அவரது 20 வருடகால ஊடகப் பணிகள், ஒரு சிறந்த ஊடகவியலாளராக, அவரை உயர்த்தியிருப்பதை நாடறியும். இத்தகையோரின் கருத்துகளை ஏற்று ஜீரணிக்க முடியாதவர்கள்தான், ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் வன்முறைகளை கட்டவிழ்த்து விடுகின்றனர். முழு நாடுமே விசேடமாக கொழும்பு பெரும்பாகம் பாதுகாப்பு வலைப்பின்னலுக்குள் உட்படுத்தப்பட்டு அதன் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் எழுதுகோலையே ஆயுதமாகக் கொண்டிருக்கும் நடராஜா குருபரன், கடத்தப்பட்டிருப்பது பல்வேறு சந்தேகங்களையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இக்கடத்தலில் எந்தத் தரப்பினரோ, குழுவினரோ சம்பந்தப்பட்டிருந்தாலும் அவர்களின் இச்செயலானது மிக வெறுக்கத்தக்கதும் கண்டிக்கத்தக்கதுமாகும்.கடத்தப்பட்ட "சூரியன் எப்.எம்." செய்தியாசிரியர் நடராஜா குருபரன் எவ்வித ஆபத்துமின்றி விடுவிக்கப்பட வேண்டும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இக்கடத்தலோடு தொடர்புடையவர்களை கேட்டுக் கொள்ளும் அதே நேரம், அவரை உயிராபத்தில் இருந்து காக்கவும் விடுவிக்கவும் கூடிய சகல மட்டத்திலான நடவடிக்கைகளையும் அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றது.

### தேசிய சமாதான பேரவை

ஊடகவியலாளர் குருபரனுக்கு எவ்வித ஊறும் விளைவிக்காமல் அவரை கடத்தியவர்கள் விடுதலை செய்ய வேண்டும் என தேசிய சமாதான பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

முன்னணி ஊடகவியலாளர் நடராஜா குருபரன் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டமை தொடர்பாக தேசிய சமாதான பேரவை விடுத்துள்ள செய்திக் குறிப்பி[illegible] சுதந்திரம் அமைந்துள்ளது. இதற்கு ஊடக சுதந்திரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளமை குறித்து தேசிய சமாதான பேரவை ஆழ்ந்த கவலையடைந்துள்ளது.

ஊடக நிறுவனங்கள் மீதும் பத்திரிகையாளர்கள் மீதும் பல தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இதன் காரணமாக பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் சொத்துகளுக்கும் அழிவு ஏற்பட்டுள்ளது.

குருபரனுக்கு எவ்வித ஊறும் விளைவிக்காமல் அவரை விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

குருபரன் எமது அமைப்பின் பல சமாதான நடவடிக்கைகளில் கலந்துகொண்டவர்.

ஊடகவியலாளர்கள் பாதுகாப்பாக பணிபுரியும் அவர்களது உயிர்கள் பாதுகாக்கப்படும் சூழலை ஏற்படுத்துமாறு அரசாங்கத்தையும், சட்ட அமுலாக்கல் அதிகாரிகளையும் கேட்டுக் கொள்கின்றோம்.

### மேலக மக்கள் முன்னணி

தமிழ் ஊடகவியலாளர் கைது செய்வது, கடத்திச் செல்வது மட்டுமல்லாது கொலை செய்வதும் சர்வ சாதாரணமாகிவிட்டது. இது சகோதர சிங்கள ஊடகயவிலாளருக்கும் ஏற்படவே செய்கிறது. இன்று திறமை வாய்ந்த தமிழ் ஊடகவியலாளர்களை இழந்து நாம் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றோம். கொடிய யுத்தத்தால் எமது மக்களை, குழந்தைகளை நாளாந்தம் இழந்து கொண்டிருக்கிறோம். இன்று சிறந்த ஒரு தமிழ் ஊடகவியலாளர் நடராஜா குருபரன் கடத்தப்பட்டு விட்டார் என்ற அதிர்ச்சியில் சோகத்தில் மூழ்கி நிற்கின்றோம். அவரை நேர்மையான முறையில் அவரது குடும்பத்தி[illegible]ம் சேர்க்க அரசாங்கம் முழு அளவிலான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மேலக மக்கள் முன்னணியின் உப தலைவரும், கொழும்பு மாநகர சபை உறுப்பினரும் அகில இலங்கை தலைவருமான வேலணை வேணியன் வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளார்.

மேலும், அவர் இது தொடர்பாக தெரிவித்திருப்பதாவது அரசாங்கம் சகல தமிழ் ஊடகவியலாளர்களுக்கும் போதிய பாதுகாப்பினை வழங்க முன்வர வேண்டும். [illegible] பரன் நலமே எம்முன் மீண்டும் வர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கட்சி பேதங்களை மறந்து, இவ்விடயத்தில் சகல அரசியல் தலைவர்களும் ஒரே குரலில் நடராஜா குருபரன் விடுதலைக்கு தம்மால் இயன்ற பங்களிப்புகளை வழங்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையும் வேண்டுகோளுமாகும்.

### வன்னி மாவட்ட எம்.பி வினோ ராதலிங்கம்

'சூரியன் எப்.எம்.' செய்தி முகாமையாளர் நடராஜா குருபரன் கொழும்பில் கடத்திச் செல்லப்பட்ட சம்பவமானது எமக்கும் இலட்சக்கணக்கான வானொலி நேயர்களுக்கும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் தந்துள்ளது. உண்மைகளை, உடனுக்குடன் ஒவ்வொரு மணிநேரத்துக்கும் உலகத்துக்கு அனுப்பிக் கொண்டிருந்த ஒரு செய்தி ஆசிரியரின் கடத்தலை ஒவ்வொரு மணி நேரமும் செய்தியாக கேட்டுக் கொண்டிருக்கும் தமிழ் பேசும் நெஞ்சங்கள், நேயர்கள் ஏக்கத்துடன் விம்மிக் கொண்டிருக்கிறார்கள். செய்திகளைத் தந்தவர் செய்தியாக உள்ள போது வேறு எந்தச் செய்திகளையும் கேட்க எவரும் தயாராக இல்லை. குருபரன் விடுவிக்கப்பட்டார் என்ற செய்தியை மட்டுமே உள்வாங்கக் கூடிய மனநிலையிலேயே தமிழ் பேசும் மக்கள் காத்திருக்கின்றார்கள் என்றும் வன்னி மாவட்ட எம்.பி. வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் வழமைபோன்று சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றது [illegible]ற பேச்[illegible]சை விடுத்து அவரது உயிருக்கு [illegible]வித ஆப[illegible]ும் ஏற்படாது தடுக்க செய[illegible]லில் இறங்க வேண்டும். அரசாங்கம், உண்மையுடனும் நேர்மையுடனும் செயற்பட்டால் நிச்சயமாக அவரை விடுவிக்க முடியும். ஊடக சுதந்திரத்தையும் ஊடகவியலாளர்களையும் காப்பாற்றத் தவறிய, தவறிக் கொண்டிருக்கின்ற அரசாங்கம் மீது [illegible] மக்களால் நம்பிக்கை வைக்க முடியாது.

விசேட பாதுகாப்பு வலையமைபுக்கு[illegible] கொழும்பு நகரை கொண்டு வந்ததன் பின்னர் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. நகரின் மூலை முடுக்குகள் எல்லாம் பொலிஸாரும்

கின்றார். தென்னிலங்கை அரசியல் சக்திகளின் பொது இணக்கப்பாடு என்பது ஒரு போதும் சாத்தியப்படக்கூடியதல்ல. இதுபோக்கு அழகாகதென்றாலும்... ஆனால், நடைமுறைச் சாத்தியத்துக்கு ஒத்துவரவே முடியாது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது இனவாதக் கட்சி பங்காளிகளும் ... நிற்பதையே இதன் மூலம் காணக்கூடியதாக உள்ளது. பேரினவாதச் சக்திகளான ஜாதிக ஹெல உறுமய, ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) மற்றும் ஜே.வி.பி. ... ஒருபோதும் உடன்பாடு தெரிவிக்க முன்வரப் போவதில்லை. சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரமானதொரு தீர்வு கிட்டுவதை இந்தச் சக்திகள் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்பதை கடந்த கால அனுபவங்கள் நன்கு புகட்டியிருப்பதை மீண்டும் சொல்லித் தான் தெரிய வேண்டியதில்லை.

அரசாங்கம் போரைத் தொடங்கவில்லை எனவும் விடுதலைப் புலிகள் தாக்கும் போது பதிலடியை மட்டுமே கொடுப்பதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்து வருகின்றார். ஜனாதிபதியின் இக்கூற்று சிரிப்புக்கிடமானதாகவே உள்ளது. ஆரம்பத்தில் பிரகடனப்படுத்தப்படாத போராக இருந்து இன்று அது விஸ்வரூபமெடுத்து பேரழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. இருதரப்பினரும் முன்னறிவித்தலின்றியே போர் நிறுத்த உடன்படிக்கை செல்லுபடியற்றதாகிப் போயிருப்பதையே காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த நிலையில் படுகொலைகளுடன், இரத்தம் சிந்தும் போரை முன்னெடுத்துக் கொண்டு அரசியல் தீர்வுக்கு பொது இணக்கப்பாட்டை தேடுவது நகைப்புக்கிடமானதாகவே நோக்க வேண்டியுள்ளது. போரில் முனைப்புக் காட்டிக் கொண்டு அரசியல் தீர்வு, பொது இணக்கப்பாடு என்று உரத்துக் கத்துவதன் மூலம் யாரை ஏமாற்றப் பார்க்கின்றார்கள்?

இரத்தம் சிந்தும் பேரழிவு யுத்தத்தில் ஈடுபாடு காட்டிக் கொண்டே சகல அரசியல் கட்சிகளினதும் பொது இணக்கப்பாட்டோடு அரசியல் தீர்வுத் திட்டம் தயாரிக்கப் போவதாக ஜனாதிபதி கூறுவது அவரது உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் அணுகுமுறையையே வெளிக்காட்டுகிறது. சிங்கள பேரினவாத போக்குடையவர்களை அரவணைத்துக் கொண்டு அனைத்துத் தரப்பினரதும் பொது இணக்கப்பாட்டை ஜனாதிபதி எவ்வாறு பெற்றுக் கொள்ளப் போகிறார் என்பது கேள்விக்குறியே. எனினும் இப்படியொரு கபட நாடகத்தை ஆடினால் மட்டும் தான் தம்மால் அதிகாரத்தில் நீடிக்க முடியும். அரசு வீழ்வதைத் தடுக்க முடியும் என்பதே அவரது உள் நோக்கமாகும்.

தான் இனவாதியல்ல. நேர்மையானவர் என்பதை ஜனாதிபதி நிரூபிக்க ஒரே வழி தான் உண்டு. தென்னிலங்கை அரசியல் சக்திகளின் பொது இணக்கப்பாடு என்ற போலித் தனத்தின் பின்னால் ஒளிந்து கொண்டிராமல் அரசியல் இலாபத்தை எண்ணாமல் இன நெருக்கடிக்கான அரசாங்கத்தின் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க முன் வர வேண்டும். தன்னிடம் எதுவுமில்லை என்பதை மூடி மறைத்துக் கொண்டு ஏனையவர்களின் பொது இணக்கத்தைத் தேடுவதன் மூலம் வெறுமனே காலம் தான் கடந்து கொண்டு போகும். காரிய சித்தி எதுவுமே எட்டப்படப் போவதில்லை. தானும், தனது அரசியலும் பாதுகாக்கப்பட வேண்டுமா, அல்லது நாடு பாதுகாக்கப்பட வேண்டுமா என்பதை ஜனாதிபதி காலம் கடத்தாமல் தீர்மானிக்க வேண்டியது அவசியமானதாகும்.

துள்ளனர்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே பல முறை சுட்டிக்காட்டியிருப்பதைப் போல ஊடகங்கள் மீதான அடக்குமுறைகள், அடாவடித்தனங்களையும் ஊடகவியலாளர்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள், கொலை பயமுறுத்தல்கள், கடத்தல்கள் முதலான சகல வகையான ஜனநாயக விரோத செயற்பாடுகளையும் வன்மையாகக் கண்டிக்கிறது. ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் மீதான வன்முறை சார் மறைமுகச் செயற்பாடுகள் அண்மைக்காலமாக நாட்டில் அதிகரித்து வந்திருப்பதை, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மிக ஆழ்ந்த

முன்னணி ஊடகவியலாளர் நடராஜா குருபரன் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டமை தொடர்பாக தேசிய சமாதான பேரவை விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில், மேலும் குறிப்பிடப்பட்டுள்ள்தாவது;

சூரியன் எப்.எம். இன் செய்தி முகாமையாளரும் முன்னணி ஊடகவியலாளருமான நடராஜா குருபரன் செவ்வாய்க்கிழமை அதிகாலை கடத்தப்பட்டுள்ளமை அனைவருக்கும் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தும் விடயமாக அமைந்துள்ளது.

ஜனநாயகத்தின் அடிப்படையாக ஊடக

மேலும், அவர் இது தொடர்பாக தெரிவித்திருப்பதாவது அரசாங்கம் சகல தமிழ் ஊடகவியலாளர்களுக்கும் போதிய பாதுகாப்பினை வழங்க முன்வர வேண்டும். தமிழ் ஊடகவியலாளர்கள் பெரும்பாலும் சிங்களச் சகோதரர்களுக்கு விரோதிகளல்லர். தொடரும் கொடிய யுத்தத்தையும், அடாவடித்தனமான கைதுகளையுமே கண்டிருக்கிறார்கள். அதுவே தமிழ் மக்களின் நிலைப்பாடுமாகும். ஏதொரு ஆபத்துமின்றி நாம் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என்ற இன, மத, பேதமின்றி குரு

விசேட பாதுகாப்பு வலயமைப்புக்குள் கொழும்பு நகரை கொண்டு வந்ததன் பின்னர் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. நகரின் மூலை முடுக்குகள் எல்லாம் பொலிஸாரும் முப்படையினரும் தீவிர கண்காணிப்பில் இருக்கின்றனர். சோதனைச் சாவடிகள் பரவலாக காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் கடந்து மர்மமாக கடத்தல் நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது. எனவே, குருபரனை விடுவிக்க ஆரோக்கியமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் விநோ எம்.பி. தெரிவித்திருக்கிறார்.

## பல்கலை. மானியங்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு!

நாட்டின் தற்போதைய அசாதாரண சூழலைக் கருத்திற்கொண்டு வடக்கு மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் பரஸ்பரம் இடம்மாறிக் கொள்வதற்கு விடுத்த கோரிக்கையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிராகரித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிள்ளையார் வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக மாணவனான தர்மகுலசிங்கம் சுதாகரன் என்பவரே மேற்படி முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

மிக வறுமையான குடும்பத்தில் பிறந்த நான் சிறு வயதிலேயே தந்தையை இழந்து அன்னையின் அரவணைப்பிலே படித்து கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகினேன். நாட்டின் தற்போதைய சூழல் காரணமாக போக்குவரத்து மற்றும் வாழ்க்கைச் செலவீனம் இவற்றைவிட மேலாக பாதுகாப்பு என்பனவற்றைக் காரணங்காட்டி யாழ்.பல்கலைக்கழகத்துக்கு இடமாற்றம் செய்து தருமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை கோரியிருந்தேன்.

இதேபோன்று, கிழக்கு மாகாணம் ஏறாவூரில் என்னைப்போலவே தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழும் மாணவன் ஒருவன் யாழ்.பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியிருந்தார். தற்போதைய நாட்டின் சூழ்நிலையைக் கருதி, நாம் இருவரும் இரு பல்கலைக்கழகப் பீடாதிபதிகளின் சம்மதத்தோடு நம்மை இடமாற்றம் செய்யுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவைக் கோரியிருந்தபோதும் அவை மறுக்கப்பட்டு விட்டன.

இந்நிலையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து எமது கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவினராகிய தங்களைக் கோரி நிற்கின்றேன் என்று அந்த மாணவர் தமது முறைப்பார்ட்டில் தெரிவித்துள்ளார். (ச)

## மழை வேண்டி பூசை வழிபாடுகள்!

தற்போது நிலவும் கடும் வரட்சி மற்றும் வெப்பத்தால் நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில் உள்ள கிணறுகளில் நீரின் மட்டம் மிகக் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இந்தப் பகுதியிலுள்ள தோட்டக் கிணறுகளிலும் நீரின் மட்டம் குறைந்துள்ளதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதிகளில் விவசாயிகள் வெங்காயம் மற்றும் வாழைச் செய்கைகளில் ஈடுபட்டு வருவதால் கிணறுகளில் தண்ணீர் மட்டம் குறைவாக இருப்பதாலும் பயிர்களுக்குப் போதிய நீர் இல்லாததினாலும் பயிர்கள் பாதிக்கப்படும் நிலை தோன்றியுள்ளன.

இதேசமயம், இந்தப் பகுதி ஆலயங்களில் மழை வேண்டி விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

## தனுஷ் கோடிக்கு 162 அகதிகள் சென்றனர்

தனுஷ்கோடி அரிச்சல்முனை மற்றும் மண்டபம் அருகே வேதாளை கடற்கரைப் பகுதிக்கு, ஞாயிற்றுக்கிழமை இரவு மற்றும் திங்கட்கிழமை 162 இலங்கை அகதிகள் சென்றடைந்தனர்.

இலங்கை மன்னார், திருகோணமலை மற்றும் வவுனியா பகுதியில் இருந்து 45 குடும்பங்களைச் சேர்ந்த 162 பேர், தனுஷ்கோடி அரிச்சல்முனை மற்றும் மண்டபம் அருகே உள்ள வேதாளை கடற்கரைப் பகுதிக்கு சென்றனர்.

## கொடிகாமம் இளைஞர் கொட்டாஞ்சேனையில் கைது விடுவிக்குமாறு ம.உ.ஆணைக்குழுவில் முறைப்பாடு!

யாழ்.கொடிகாமம் பகுதியைச் சேர்ந்தவரும், கொழும்பு இல.9 கிராண்ட்பாஸ் விடுதியில் வசித்து வந்தவருமான குணச்செல்வம் மகிந்தன் என்பவரை கொட்டாஞ்சேனைப் பொலிஸார் கைதுசெய்துள்ளதாகவும் அவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரி அவரது பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த அவரது தாயார் திருமதி குணச்செல்வம் றோசாமலர் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேற்படி விடுதியில் தங்கியிருந்த எனது மகனை கடந்த 24 ஆம் திகதி அதிகாலை 12.30 மணியளவில் பொலிஸார் ... கைதுசெய்து சென்றுள்ளனர்.

இக் கைது தொடர்பாக கொட்டாஞ்சேனைப் பொலிஸாருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அப்படியானதொரு பெயருடைய நபரைத் தாம் கைது செய்யவில்லை என்று மறுத்துள்ளனர்.


இந்நிலையில், தினக்குரல் பத்திரிகையினருக்கு அறிவித்து, அங்கிருந்து குறித்த பொலிஸ் நிலையத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கதைத்தபோது, குறித்த நபரை தாமே கைதுசெய்து சென்றதாகவும் - தற்போது தமது பாதுகாப்பில் அவரைத் தடுத்து வைத்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், எனது மகன் எங்குள்ளார் என்று விசாரித்தறிந்து, அவரை விடுதலை செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்று அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## எம்.ஜி.ஆர். சிலை தார் பூசி சேதம்

யாழ்ப்பாணத்தில் உள்ள வல்வெட்டித்துறையில் மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் சிலை நிறுவப்பட்டுள்ளது. இந்தச் சிலை கடந்த ஆண்டு இந்திய சிற்பக் கலைஞர்களால் உருவாக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் கடந்த 2 வாரங்களுக்கும் மேலாக ஊரடங்கு சட்டத்தை இராணுவத்தினர் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். இந்த ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள இரவு நேரத்தில் இனந்தெரியாதோர் எம்.ஜி.ஆர். சிலை மீது தாரைப் பூசி சேதப்படுத்தி உள்ளனர்.



# சம்பூரிலிருந்து திருமலைத் துறைமுகத்தைத் தாக்கும் விடுதலைப் புலிகளை தீர்த்துக்கட்ட வேண்டியுள்ளது!

## பின்லாந்து தூதுவரிடம் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவிப்பு



யாழ். குடாநாட்டுக்கான நுழைவு பாதையான முகமாலை சோதனைச் சாவடியை விடுதலைப் புலிகளே மூடியுள்ளதாகத் தெரிவித்த இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா, சம்பூரிலிருந்து திருகோணமலை துறைமுகத்தை தாக்கிவரும் விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க வேண்டியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

புது டில்லியிலிருக்கும் இலங்கைக்கான பின்லாந்து உயர்ஸ்தானிகர் அஸ்கோ நுமினின் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவை இராணுவ தலைமையகத்தில் சந்தித்துப் பேசியுள்ளார்.

இருவருக்குமிடையில் நடைபெற்ற இச் சந்திப்பின் போது நாட்டின் பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து நீண்ட நேரம் உரையாடப்பட்டுள்ளது.

இங்கு இராணுவத் தளபதி தெரிவிக்கையில்;

நாட்டிலுள்ள யுத்த சூழ்நிலையில் புலிகள் யாழ்ப்பாணத்திற்கான முகமாலை நுழைவு சாவடியை திடீர் திடீரென மூடி விடுகின்றனர். இதனால் யாழ்ப்பாணத்திற்கு தேவையான உணவுப் பொருட்களை கடல் மற்றும் வான் வழியூடாக அனுப்பி வைக்க வேண்டியுள்ளது.

படையினரையும்பொருட்களையும் திருகோணமலை துறைமுகம் ஊடாக அனுப்பும் போது துறைமுகத்தின் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டியுள்ளது.

இதனால் திருகோணமலை துறைமுகத்தை சம்பூரிலிருந்து தாக்கி வரும் புலிகளை அழித்தொழிக்க வேண்டி இருக்கின்றது. புலிகளுக்கு சார்பான ஊடகங்கள் சர்வதேச ரீதியில் இங்குள்ள நிலைமைகளை மாற்றி, தவறான பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்ததுடன் பின்லாந்து தூதரை யாழ்ப்பாணம் வந்து நிலைமைகளை நேரடியாக பார்க்கும் படியும் அழைப்பு விடுத்துள்ளார்.



வவுனியா கந்தசுவாமி கோவில் வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட இரு ஆண்களின் சடலங்களை வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் பார்வையிடுவதை படத்தில் காணலாம்.

# கொழும்பு தேசிய வைத்தியசாலையருகே குண்டுப்புரளியால் நேற்று பெரும் பதற்றம்

கொழும்பு, தேசிய வைத்தியசாலையின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியொன்றில் கைவிடப்பட்டு சென்றிருந்த பொதியொன்றினால், நேற்று செவ்வாய்க்கிழமை காலை கொழும்பில் குண்டுப் புரளியேற்பட்டதால் பெரும் பதற்றம் நிலவியது.

காலை 8.30 மணியளவில் ஆட்டோவில் குண்டு பொதியிருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து ஸ்தலம் விரைந்த குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் அந்த பார்சலை பாதுகாப்புடன் அகற்ற பரிசோதனை செய்தபோது அதில் குண்டோ வெடி பொருட்களோ இருக்கவில்லை.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கும் கண் ஆஸ்பத்திரிக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே முச்சக்கர வண்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், விஷமிகள் அதற்குள் பேப்பர் பார்சலொன்றை போட்டு குண்டு புரளியை ஏற்படுத்தியதாக மருதானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை, இச்சம்பவத்தை தொடர்ந்து அப்பகுதியிலுள்ள அனைத்து வாகனங்களும் அப்புறப்படுத்தப்பட்டு தேடுதல் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# ஆங்கில தினப் போட்டிக்காக கொழும்பு சென்ற யாழ். மாணவர்கள் திரும்பி வர முடியாத நிலை!

## கல்வியமைச்சை குற்றம் சாட்டுகிறது இலங்கை ஆசிரியர் சங்கம்

ஆங்கில தினப்போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு சென்ற மாணவர்கள் மீண்டும் இங்கு வர முடியாது கொழும்பில் பரிதவிப்பதாகவும் இவர்களை யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் அனுப்பிவைக்க கல்வியமைச்சு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லையெனவும் இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

சுமார் 30 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வியமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறும் ஆங்கில தினப்போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணத்தில் மோதல் நிலை உருவாகும் முன்னர் கொழும்புக்கு வந்தனர்.

இந்நிலையில், காரணம் கூறப்படாது ஆங்கில தினப்போட்டிகளை ஒத்திவைத்துள்ளதாக கல்வியமைச்சு அறிவித்தது.

இதற்கிடையில் குடாநாட்டில் மோதல்கள் ஏற்பட்டன. கொழும்புக்கு வந்த மாணவர்கள் இதனால் அங்கு மீண்டும் செல்ல முடியாது உறவினர் வீடுகளிலும், பொதுவிடங்களிலும் தங்கியுள்ளனர்.

குடாநாட்டில் தொலைத்தொடர்பு சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளமையால் இந்த மாணவர்கள் தமது பெற்றோருடன் தொடர்பு கொள்ள முடியாத பரிதாப நிலை காணப்படுவதுடன் மாணவர்களும் இதனால் விரக்தியடைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோஸப் ஸ்டாலின் கூறுகையில்,

ஆங்கில தினப் போட்டிக்காக கொழும்புக்கு சென்ற மாணவர்களை கல்வியமைச்சு கைவிட்டுவிட்டது. தற்போதுள்ள பாதுகாப்பு சூழ்நிலையில் இது பாரதூரமான விளைவுகளை தோற்றுவிக்கும்.

எனவே, கொழும்பிலுள்ள குடாநாட்டு மாணவர்களை உரிய பாதுகாப்புடன் குடாநாட்டுக்கு அனுப்பிவைக்க கல்வியமைச்சு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் மாணவர்களை குடாநாட்டுக்கு அனுப்பிவைக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு நாம் சம்பந்தப்பட்டவர்களை கோருகிறோம் என்றார்.

# டில்லியில் இன்று வைகோ தலைமையில் ஆர்ப்பாட்டம்



இலங்கை இராணுவத்தை கண்டித்து புது டில்லியில் உள்ள இலங்கைத்தூதரகம் முன்பு ...


கண்டித்து இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கழக பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் டில்லியில் கண்டனப் பேரணி நடக்கிறது. இந்தப் பேரணி புது ...

## கல்வியியற் கல்லூரியின் கற்றல் நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கற்றல் நடவடிக்கைகள் எதிர்வரும் முதலாம் திகதி மீண்டும் ஆரம்பமாக ...

# யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படும்

- அரச அதிபர் தலைமையில் நடந்த கூட்டத்தில் தீர்மானம் -



கண்டித்து புதுடில்லியில் உள்ள இலங்கைத்தூதரகம் முன்பு வைகோ தலைமையில் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது. இது குறித்து ம.தி.மு.க. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது;

அப்பாவி தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் நடத்தும் இனப் படுகொலையைக் கழகத்தின் சார்பில் கழக பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் டில்லியில் கண்டனப் பேரணி நடக்கிறது. இந்தப் பேரணி புது டில்லி தெற்கு அவென்யூவிலிருந்து புறப்பட்டு இலங்கை தூதரகத்தின் முன்பாக முடிவடைகிறது. அதனைத் தொடர்ந்து மறியல் அறப்போராட்டம் நடைபெறுகிறது.

இந்தக் கண்டனப் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்திற்கு ம.தி.மு.க. அவைத் தலைவர் எல்.கணேசன் எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் செஞ்சி ந.ராமச்சந்திரன் எம்.பி., டாக்டர் சி.கிருஷ்ணன் எம்.பி., சிப்பிப்பாறை அ.ரவிச்சந்திரன் எம்.பி., உள்ளிட்ட கழக முன்னணியினரும் தொண்டர்களும் கலந்து கொள்கின்றனர்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கற்றல் நடவடிக்கைகள் எதிர்வரும் முதலாம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக கல்லூரியின் பீடாதிபதி அறிவித்துள்ளார். விடுதிகளில் தங்கியிருந்து கல்வி பயிலும் மாணவர்கள் தமது பெற்றோருடன் நாளை வியாழக்கிழமை கல்லூரிக்கு சமூகமளிக்குமாறு கேட்டுள்ளார்.

### பணிகள் ஆரம்பம்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தின் பணிகள் இன்று முதல் வழமைபோன்று ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் நேரங்களில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று முதல் ஆரம்பிக்கப்படும்

### - அரச அதிபர் தலைமையில் நடந்த கூட்டத்தில் தீர்மானம் -

யாழ். குடாநாட்டில் 2ஆம் தவணைக்காக மூடப்பட்டுள்ள பாடசாலைகளை 3ஆம் தவணைக்காக இன்று திறப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆயினும், தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளை திறப்பது தொடர்பாக தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு தளர்த்தப்பட்டு அரை மணித்தியாலத்தின் பின்னர் பாடசாலைகளை இயக்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையை கருத்திற்கொண்டு மாணவர்களது சீரான உட, உள விருத்திச் செயற்பாட்டை மேம்படுத்தும் வகையில் மீளக் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டமொன்று நேற்று நண்பகல் யாழ். நகரிலுள்ள இராணுவ சிவில் நிர்வாக காரியாலயத்தில் இடம்பெற்றது.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ். மாவட்ட கல்வி வலயப் பணிப்பாளர்கள், மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் மற்றும் இராணுவ சிவில் நிர்வாக அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதனடிப்படையில் வடமராட்சி, வலிகாமம் யாழ்ப்பாணம் மற்றும் தீவக வலயப் பாடசாலைகளை ஊரடங்கு விலக்கப்படும் நேரத்திலிருந்து அரை மணிநேரம் தாமதித்து ஆரம்பிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

## எம்.ஜி.ஆர். சிலைக்கு தார் பூசி ஈழத் தமிழரை மட்டுமன்றி தமிழகத்தையும் இலங்கை இராணுவம் காயப்படுத்தி விட்டது

### ஜெயலலிதா, வைகோ கடும் கண்டனம்

யாழ்ப்பாணத்தில் எம்.ஜி.ஆர். சிலையை இலங்கை இராணுவத்தினர் தார் பூசி சேதப்படுத்தியமைக்கு தமிழக முன்னாள் முதல்வரும் அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளருமான ஜெ.ஜெயலலிதா கண்டனம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

இலங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள வல்வெட்டித்துறையில் நிறுவப்பட்டுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். திருவுருவச் சிலை மீது சிங்கள இராணுவ வீரர்கள் தார் பூசி சேதப்படுத்தியுள்ளதாக பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்தியைப் பார்த்து நான் மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்த அநாகரிகச் செயல், உலகத்தில் உள்ள ஒட்டுமொத்த தமிழர்களின் மனதை புண்படுத்துகின்ற செயல்.

இதற்கு எமது வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

இதேவேளை, ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்துக்கு அடித்தளமாகவும் அரணுமாக இருந்த மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். சிலைகளை சேதப்படுத்திய சிங்கள இராணுவம், தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று மறு மலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

வைகோ நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

யாழ். குருநகர் மற்றும் வல்வெட்டித்துறையிலும் ஈழத்தமிழர்கள் நிறுவியிருந்த எம்.ஜி.ஆர். சிலைகளை அடித்து நொருக்கி சேதப்படுத்தியும் சிலைகளுக்கு தார் பூசியும் சிங்கள இராணுவத்தினர் வெறியாட்டம் போட்டுள்ளனர்.

சிங்கள இராணுவம் ஊரடங்குச் சட்டத்தை போட்டு பொது மக்களின் நடமாட்டத்தை முடக்கி விட்டு எம்.ஜி.ஆர். சிலையில் தாரைக் கொட்டி சேதப்படுத்தியுள்ளது.

ஈழத்தமிழரின் போராட்டத்திற்கு அடிப்படையும் அரணும் அமைத்துக் கொடுத்ததில் எம்.ஜி.ஆர். க்கு பெரும் பங்கு உண்டு.

எனவே, ஈழத் தமிழர், எம்.ஜி.ஆர். அவர்களை நெஞ்சில் வைத்து போற்றுகின்றனர்.

இந்தச் செயல் ஈழத் தமிழர்கள் மனதையும் தாய்த் தமிழகம் உள்ளிட்ட உலகெங்கும் வாழும் தமிழர்கள் நெஞ்சத்தையும் காயப்படுத்தி கொந்தளிக்கச் செய்துள்ளது.

இந்த அராஜகத்தில் ஈடுபட்ட சிங்கள இராணுவத்துக்கும், இராணுவத்தை ஏவி இயக்கி வரும் சிங்கள அரசுக்கும் கண்டனம் தெரிவிப்பதோடு தமிழர் தாயகத்திலிருந்து சிங்கள இராணுவம் வெளியேறுவதே பிரச்சினைகளுக்கு தீர்வாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## கலைத்துறையில் சித்தியடைந்தோரை தாதியராக நியமிப்பதற்கு நடவடிக்கை

வடக்கு, கிழக்கில் நிலவும் தாதியர் வெற்றிடத்தை கருத்திற்கொண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைத்துறையில் சித்தியடைந்த வட, கிழக்கைச் சேர்ந்தவர்களையும் தாதியர் சேவைக்குள் உள்ளீர்க்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அண்மையில் நாடு பூராவுமிருந்து தாதியர் சேவைக்கு 2 ஆயிரத்து 500 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இவர்களில் வட, கிழக்கைச் சேர்ந்தவர்கள் 162 பேராவர்.

எனினும், தொடர்ந்து வட, கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் 3 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட தாதியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக சுகாதார அமைச்சு கண்டறிந்துள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டே க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பாடத்தில் திறமைச் சித்திபெற்று, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைத்துறையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களையும் நேர்முகப் பரீட்சை மூலம் தாதியர்களாக உள்வாங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு விசேட அடிப்படையில் தாதியர் சேவைக்கு உட்வாங்கப்படுவர்களுக்கு 3 வருட கால பயிற்சி வழங்கப்படும். பயிற்சியின்போது அவர்களுக்கு மாதாந்தம் 12 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும்.

பயிற்சிக் காலம் முடிவடைந்ததும் அவர்கள் தத்தமது மாவட்டங்களில் தாதியர்களாக அரசாங்க வைத்தியசாலையில் உரிய கொடுப்பனவுகளுடன் சேவைக்கு அமர்த்தப்படுவரென சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்தது.

## குருபரனின் விடுதலை வேண்டி குடாநாட்டில் பிரார்த்தனை செய்வோம்

### வட-இலங்கை பத்திரிகையாளர் சங்கம் அழைப்பு

இலங்கையில் தொடரும் தமிழ் ஊடகங்களில் பணியாற்றும் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலின் ஓர் அங்கமாக ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையான சூரியன் எப்.எம் வானொலியின் செய்தி மற்றும் நிகழ்ச்சி முகாமையாளரான நடராசா குருபரன் நேற்றுக் காலை கடத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக வட-இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இணுவிலைப் பிறப்பிடமாக கொண்ட குருபரன் அண்மைக்காலமாக குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலின் மத்தியிலும் வானொலி ஊடாக ஆற்றியிருந்த சேவைகள் சொல்லிலடங்கா.

கடத்தப்பட்ட குருபரனது நிலை தொடர்பான மர்மம் நீடிக்கும் நிலையில், அவரது விடுதலை வேண்டியும், தனது பணிகளை தொடரவேண்டியும் மத வழிபாட்டுத் தலங்களில் இன்று விசேட பூசை மற்றும் பிரார்த்தனைகளுக்கு சங்கம் ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டு மக்கள் அனைவரும் இப்பிரார்த்தனை நிகழ்வில் கலந்துகொண்டு குருபரனின் விடுதலைக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் வட-இலங்கை பத்திரிகையாளர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

## வவுனியாவில் சூட்டுக் காயங்களுடன் 2 ஆண்களின் சடலங்கள் கண்டுபிடிப்பு!

வவுனியா கந்தசாமி கோவில் வீதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இரு ஆண்களின் சடலங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கண்டுபிடிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் பிற்பகல் இராணுவச் சிப்பாயொருவர் சுட்டுக் கொல்லப்பட்ட கராஜின் முன்பாகவே இவ்விரு சடலங்களும் நேற்றுக்காலை கண்டுபிடிக்கப்பட்டன. திங்கட்கிழமை இரவு அல்லது அதிகாலை வேறு எங்கோ ஓரிடத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் இவ்விருவரதும் சடலங்கள் இங்கு கொண்டு வரப்பட்டு போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நடுத்தர வயதுடைய இவ்விருவரில் ஒருவர் வவுனியா சேர்ந்தவரெனவும் மற்றவர் வீரபுரத்தைச் சேர்ந்தவரெனவும் தெரிவிக்கப்படுகிறது. நேற்றுக்காலை, சடலங்கள் கிடந்த இடத்திற்குச் சென்ற மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் மரண விசாரணையை நடத்திய பின் பிரேத பரிசோதனைக்காக இரு சடலங்களும் வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இப்பத்திரிகை நொதேர்ன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டாரால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி, 336 ஆம் இலக்கத்திலுள்ள அலுவலகத்தில் ஆகஸ்ட் மாதம் 30ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.